செய்தி வெளியீடு எண்:43 நாள்:22.01.2021

## செய்தி வெளியீடு

### 24–வது தேசிய இளைஞர் விழா 2021–ல் நடைபெற்ற போட்டிகளில் தமிழ்நாடு தேசிய அளவில் இரண்டாவது இடத்தை பெற்றுள்ளது

சுவாமி விவேகானந்தர் அவர்களது பிறந்த நாள் தேசிய இளைஞர் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதனையொட்டி ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி 12 முதல் 16 வரை தேசிய இளைஞர் விழா மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. கோவிட்–19 பெருந்தொற்று காரணமாக மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, 24வது தேசிய இளைஞர் விழா – 2021 தொடர்பான மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள், தமிழ்நாட்டில், நாட்டு நலப்பணித் திட்டம், நேரு யுவ கேந்திரா சங்கதன் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஆகியவற்றின் துணையுடன் இளைஞர்கள் பங்கேற்கும் வகையில் மெய்நிகர் முறையில் 29.12.2020 முதல் 8.1.2021 முடிய நடத்தப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, தமிழ்நாட்டில் உள்ள 37 மாவட்டங்களிலும், போட்டிகள் நடத்தப்பட்டன. நாட்டிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழ்நாட்டில் மிகப் பெரிய அளவில் 59,199 நுழைவுகள் பெறப்பட்டது மிகச் சிறப்பானதாகும். கிளாசிக் இசை (தனிநபர் குரல்), வடிவமைப்பு – பாரம்பரியம், வடிவமைப்பு – நவீனம், கலைக்காட்சி – வரைதல், கலைக்காட்சி – புகைப்படம் – சுற்றுச்சூழல் மற்றும் கலைக்காட்சி – சிற்பம் தயாரித்தல் – களிமண் (தனிநபர்) ஆகிய போட்டி வகைகளில் தமிழ்நாடு பங்கேற்றது.

சென்னை நேரு உள் விளையாட்டரங்கில் கடந்த 2.1.2021 அன்று சென்னை – தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் நுண்கலைகள் பல்கலைக்கழகம், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், நேரு யுவ கேந்திரா சங்கதன் மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவற்றிலிருந்து சிறந்த வல்லுநர்களைக் கொண்டு ஒவ்வொரு வகையிலான போட்டிகளிலும் மாநில அளவில் முதல் 3 நுழைவுகள் இறுதி செய்யப்பட்டது.

சென்னை, கலைவாணர் அரங்கில் **4.1.2021, 5.1.2021** மற்றும் **6.1.2021** ஆகிய தேதிகளில் வல்லுநர் குழுவின் ஆலோசனையின் அடிப்படையில், **136** வெற்றியாளர்களின் வெளிப்பாடுகள் பதிவு செய்யப்பட்டது.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் **12.1.2021** அன்று துவக்கி வைக்கப்பட்ட தேசிய இளைஞர் விழா **– 2021** நிகழ்விற்காக மேற்படி பதிவுகள் மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டன. தேசிய அளவிலான போட்டிகளில் கிளாசிக் இசை (தனிநபர் குரல்) போட்டியில் கன்னியாகுமரியை சேர்ந்த எஸ். பவனேத்ரா, வடிவமைப்பு – பாரம்பரியம் போட்டியில் மதுரையைச் சேர்ந்த அபர்ணா மற்றும் அஜீத் குமார், கலைக்காட்சி – வரைதல் போட்டியில் திருச்சியைச் சேர்ந்த கிருஷ்ணகுமார், கலைக்காட்சி – சிற்பம் தயாரித்தல் – களிமண் (தனிநபர்) போட்டியில் கோயம்புத்தூரைச் சேர்ந்த கிருத்திகா ஆகியோர் முதல் இடத்தையும் பெற்றுள்ளனர்.

வடிவமைப்பு – பாரம்பரியம் போட்டியில் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பிருந்தா மற்றும் டீனா, வடிவமைப்பு – நவீனம் போட்டியில் செங்கல்பட்டைச் சேர்ந்த ஐஸ்வர்யாராணி மற்றும் ஆகாஷ்கண்ணா ஆகியோர் இரண்டாவது இடத்தையும், வடிவமைப்பு – பாரம்பரியம் போட்டியில் செங்கல்பட்டைச் சேர்ந்த சுசித்ரா மற்றும் லோகேஷ், கலைக்காட்சி – வரைதல் போட்டியில் திருப்பூரைச் சேர்ந்த ரம்யா, கலைக்காட்சி – புகைப்படம் **–** சுற்றுச்சூழல் போட்டியில் கடலூரைச் சேர்ந்த சிவராமகிருஷ்ணன் ஆகியோர் மூன்றாவது இடத்தையும் பெற்றனர். ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு தேசிய அளவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**